**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு**

**பொதுமக்கள் பாதுகாப்புமற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு**

**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்**

**விலைமனு கோரல்**

**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு**11UPS**வழங்கல், ஒப்படைத்தல், பொருத்துதல் மற்றும்நிர்வகிப்பதற்காகவழங்குநர் ஒருவரை தெரிவுசெய்தல்**

**ஒப்பந்த இல.: DIE/PRO/06/2025/19**

1. குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் சார்பில் திணைக்களத்தின் கொள்முதல் குழுத் தலைவரினால் **குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு05 Nos of 20KVA, 01 Nos of 15KVA and 05 Nos of 06 KVA UPSs களை கண்டி, மாத்தறை, வவுனியா, யாழ்ப்பாணம் மற்றும் குருநாகல் பிராந்திய அலுவலகங்களுக்கும் காலி, ஹம்பாந்தோட்டை, காங்கேசன்துறை, கொழும்பு, திருகோணமலை ஆகிய துறைமுகங்கள் மற்றும் பலாலி விமான நிலையம் என்பவற்றுக்கு வழங்கல், ஒப்படைத்தல், பொருத்துதல் மற்றும்நிர்வகிப்பதற்காக**தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

2. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் இந்த விலைமனுக் கோரல் நடாத்தப்படும்.

3. இதில் ஆர்வமுள்ள மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளவேலை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை தொலைபேசி இல.: 011 – 2101559க்கு அழைக்க முடியும். விலைமனு ஆவணங்களை எவ்வித கட்டணமும் இன்றி 2026.03.30 ஆம் திகதி முதல் 2026.04.24 ஆம் திகதி வரைவேலை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை4ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு வருகைத் தந்தோ அல்லது இணையத்தளத்திலோ(www.immigration.lk) பரீட்சிக்க முடியும்.

4. இதற்காக மீளளிக்கப்படாத மூவாயிரத்து ஐநூறு ரூபா (5000.00) கட்டணத்தைச் செலுத்தி பத்தரமுல்லை, ஶ்ரீசுபூத்திபுர வீதி, “சுஹுறுபாயா”, 5 ஆம் மாடியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் (கொள்முதல்) அவர்களிடம் எழுத்துமூல கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் 2026.03.30 ஆம் திகதி முதல் 2026.04.24 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக் கொள்ள முடியும். கட்டணம் காசாக மாத்திரம் செலுத்தப்படல் வேண்டும்.

5. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் “மூலப் பிரதி” மற்றும் “இணைப்பிரதி” என தனித்தனியாக கடித உறையிலிட்டு அந்த உறைகளை ஒரு உறையிலிட்டு முத்திரையிட்டுகீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு2026.04.27 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக சமூகமளித்து7 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் அதற்காக வைக்கப்படுள்ள விலைமனுப் பெட்டியில் இடுதல் வேண்டும்.விலைமனு சமர்ப்பிக்கப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தார்ரின் பெயர் மற்றும் IFBஇலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் அழைக்கப்பட்டு முடிந்தவுடன் 2026.04.27 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு சமூகமளிப்பதற்கு விருப்பத்தைத் தெரிவித்திருந்த விலைமனுதாரர்களினது பிரதிநிதிகளின் முன்னிலையில் 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

6. இந்த விலைமனு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியிலிந்து அல்லது நீடிக்கப்படும் காலப்பிரிவிலிருந்து தொன்னூற்றொரு (91) நாளுக்கு செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். எல்லா விலைமனுக்களும் நான்கு இலட்சம் ரூபா.(ரூ.400,000/-) பெறுமதியைக் கொண்ட காப்பீட்டுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அது செல்லுபடியான இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்குகின்ற வர்த்தக வங்கியொன்றால் விநியோகிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

7. விலைமனு முன் சந்திப்பொன்று 2026.04.09 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், பத்தரமுல்லை, ஶ்ரீசுபூத்திபுர வீதி, “சுஹுறுபாயா”, 7 ஆம் மாடியில் அமைந்துள்ள பயிற்சிப் பிரிவில் நடைபெறும்.

தலைவர்<br>
திணைக்கள கொள்முதல் குழு,<br>
குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,<br>
“சுஹுறுபாயா”, 05 ஆம் மாடி,<br>
ஶ்ரீசுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை.